NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 2 November 2019

# 172 ஆண்டுகளில் தென்படாத பாம்பு வகை கண்ணில்பட்டது



சிங்கப்பூரில் 172 ஆண்டுகளுக்கு மேலாகத் தென்படாத ஒரு வகைப் பாம்பு ஒன்று புக்கிட் தீமா இயற்கை வனப்பகுதியில் காணப்பட்டுள்ளது. செப்டம்பர் 16ஆம் தேதியன்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் டாக்டர் ஜான் வேன் வை, 'லைன்ட் பிளைண்ட்' வகையைச் சேர்ந்த அந்தப் பாம்பைக் கண்டார். அங்குள்ள ஒரு சைக்கிள் பாதையில் அந்தப் பாம்பு (டாக்டர் ஜான் வேன் வை) இறந்து கிடந்தது. இந்த இனப் பாம்பு இன்னமும் வாழ்கிறதா என்ற சந்தேகத்தை இந்தக் கண்டுபிடிப்பு போக்கியுள்ளது. மலேசியாவிலும் மிக அரிதாகக் காணப்படும் இந்தப் பாம்பு சிங்கப்பூரில் காணப்பட்டது எதிர்பாராதது என அதை அடையாளம் கண்ட திரு லா இங் சின்ட் தெரிவித்தார். மண்ணுக்குள் இரை தேடும் இந்த இனத்துப் பாம்பு, பெரும்பாலும் மண்ணுக்குள்ளேயே இருக்கும் என அவர் கூறினார். இதற்கு முன்பு 1847ஆம் ஆண்டு காணப்பட்ட இந்த பாம்பு இனம் இருப்பதை 2015ஆம் ஆண்டு தேசிய பூங்காக் கழகம் கணக்கெடுத்தபோது உறுதிப்படுத்தவில்லை.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.